முருகப்பெருமான் துணை

**மகான் தண்டியடிகள் அருளிய அனுகூல ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**06.03.2023**, திங்கட்கிழமை

1. அவதார ஞான சொரூபனே
அண்ணலே அரங்கமகானே
அவனியில் உன் பெருமை கூறி
அறிவிப்பேன் அனுகூல ஆசி
2. ஆசிதனை சுபகிருது சால் திங்கள்
அறிவிக்க இருபானீர் திகதி சோமவாரம்
(சுபகிருது வருடம் மாசி மாதம் 22 ம் நாள், 06.03.2023, திங்கட்கிழமை)
பேசிட தண்டியடிகள் யானும்
புகலுவேன் உலகோர் நலம்பெற
3. நலம்தரும் சன்மார்க்க நெறி
ஞானமாக அரங்கன் தந்திட
வலம் வந்து பிரணவக்குடிலை
வணங்கி தொடர்ந்து வந்து
4. வந்துமே அரங்கன் திருவடிபற்றி
வல்லமைதரும் மகாமந்திர தீட்சை
சிந்தை வைத்து ஏற்றுப் பணிந்து
செபதபம் செய்து வருதல்காண
5. காணவே உலக மக்களுக்கு
கரும வினை தானாக அகன்று
ஞான வான் எனும் நிலை தேறி
நம்பகமுற எல்லா வகைதனிலும்
6. வகைதனிலும் ஏற்றம் கண்டு
வருவாய் பெருக்கம் மாற்றம்
பகை வஞ்சம் இடர் பாற்றா
பாதுகாப்பாக மாறி இனிதே
7. இனிதே வாழும் காலமே
இந்தப் பிறவி நோக்கமாக
கனிவேலவனை வணங்கியே
கடமை சேவையென திறம்பட முடித்து
8. முடித்துமே கடைத்தேற்றம்பெற
முழுமைதனை தேடி நின்று
தடையற அரங்கமகான் வழி
தவசியாக தருமவானாக மாற்றம் கண்டு
9. கண்டுமே உலகோர் சிறப்பர்
கலியுகத்தில் தரும வழியை
தொண்டாகச் செய்து நன்கு
தொடர்ந்து உலகமெங்கிலும் தருமம்

10. தருமம் வளரும்படி செய்து
தக்கபடி உலகம் எங்குமுள்ள
கரும வினையான பசிபிணி விரட்டி
கலியினில் மக்கள் யாவர்க்கும்

11. யாவர்க்கும் நிறைவு அமைதி
உயர்வான மகிழ்வுற்ற வாழ்வாக
அவரவர்க்கும் தந்துமே அரங்கன்
அவதார மகிமை அற்புதம் நடத்தும்
அனுகூல ஆசி முற்றே

—சுபம்—